மாண்புமிகு திரு. செ. மாதவன் : நேற்று முன் தினம்தான் இதற்காக அப்படிப்பட்ட விவசாயிகளைச் சார்ந்த மாநாடு ஹோசூரில் நடத்தப்பட்டது. இந்த 11,000 ஏக்கர் சொச்சம் புறம்போக்காக, தனிப்பட்டவர்கள் ஆக்ரமிப்பில் இருக்கிறது. இதைத் திருத்தி பட்டா செய்து கொடுங்கள், மல்பெரி செடியை உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய கருத்திற்கு ஏற்ப அந்தப்பகுதியில் அரசாங்கத்தின் சார்பில் கிட்டத்தட்ட 2,400 ஏக்கரில் இந்தச் செடிகளை உற்பத்திசெய்வதற்காக தனிப்பட்ட நபர்கள் அனுபவிக்கும் நிலங்களில் அவர்களுக்கே பட்டா கொடுத்து, அந்தச் செடியைப் பயிர்செய்ய உதவி செய்ய வேண்டும் என்று நேற்று முன் தினம் கூறிய ஆலோசனைகளை அரசாங்கம் பரிசீலிக்கும்.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, தற்சமயம் பட்டின் விலை அதிகமாக இருப்பதால், இந்த முசுக்கட்டை மரங்களை அதிகமாக உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய பட்டுத் தொழில் எவ்வளவு அதிகமாக நடைபெற்றாலும், நமக்குக் கிடைக்கக் கூடிய கோரா என்ற மூலப் பொருள் கர்நாடகத்திலிருந்துதான் கிடைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே தான் அதற்கான முயற்சியை ஹோசூரில் ஒரு பகுதியில் தொடங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

சிறுவாணி குடிநீர்த் திட்டம்

* 401 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சிறுவாணி குடிதண்ணீர் திட்டத்திற்காக அணைகள் கட்டும் வேலை எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது குறித்து கேரள அரசுடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத்தலைவர் அவர்களே, கோவையில் எப்ரல்-மே மாதங்களில் மிகுந்த தண்ணீர்க் கஷ்டம் வரும். ஆகவே, மிக விரைவில் வேலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா? எவ்வளவு காலத்தில் தில் இது முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏப்ரல்-மே மாதங்களில் வருகிற தண்ணீர் தட்டுப்பாட்டை இந்த திட்டத்தை நிறைவேற்றினாலும் தீர்க்க முடியாது. மற்ற திட்டமும் நடைபெறவேண்டும். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், கேரள அரசின் ஒப்புதல் பெற்றவுடன் வேலைகள் தொடங்கப்படும்.

பூம்புகாருக்கும் சென்னைக்குமிடையே பேருந்து பணி

* 402 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னையிலிருந்து பூம்புகாருக்கு அரசுப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. எஸ். கணேசன் : தலைவர் அவர்களே, பூம்புகார் நகரம் இலக்கியச் சிறப்புப் பெற்றிருக்கிறது என்பதை அறிந்து இப்பொழுது பயணிகள் அதிகமாக அங்கே வருகிறார்கள். அரசும் கிட்டதட்ட 3.5 லட்சம் ரூபாய் செலவில் ஒரு கலைக்கூடம் கட்டி வருகிறது. இனிமேலாவது, அந்த இடத்திற்கு அரசாங்க பஸ் விடும் உத்தேசம் அரசுக்குண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாயவரத்திலிருந்து பூம்புகாருக்கு உள்ள தூரம் 21 கிலோ மீட்டர்கள்தான். பூம்புகாருக்கு இருக்கும் சாலை போக்குவரத்துக்கு அவ்வளவு வசதியாக இருக்கவில்லை. ஆகவே, தற்போது எக்ஸ்பிரஸ் பஸ் விட செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பூம்புகாரின் சிறப்பை நிலைநாட்ட அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, ரெகுலர் பஸ் விடுவதற்கு இப்பொழுது வசதிப்படாவிட்டாலும், மாமல்லபுரத்திற்கு ஸ்பெஷல் பஸ் விடுவதுபோல், பூம்புகாருக்கும் அத்தகைய பேருந்து விடுவதற்கு முயற்சி செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினருடைய கருத்து ஏற்கப்பட்டு, பரிசிலிக்கப்படும்.

Malur—Hosur Railway line

* 403 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) Whether this Government has recommended to the Southern Railway authorities at Madras, to extend the Broad-gauge Railway line from Malur Railway Station on Madras—Bangalore Broad guage Railway line to Hosur on the Salem—Bangalore Railway line; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) & (இ) சேலம் மாவட்டத்திலுள்ள ஹோசூரிலிருந்து மைசூர் மாநிலத்தின் கோலார் மாவட்டத்திலுள்ள மாலூர் வரையில் இருப்புப்பாதை அமைப்பதை நான்காவது திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி மாநில அரசு பரிந்துரைத்துள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Salem-Bangalore meter gauge line and the Madras-Bangalore broad gauge line run parallel to each other and do not meet. Somewhere they should be connected to increase the profit of the Salem–Bangalore railway. The best place for that is Hosur, because the distance between them is only twenty miles. This link has a vast hinterland. The Rayalaseem district; The Kalan district; The East South Bangalore district with the Rayalaseema districts, will have access to the Salem-Bangalore railway. Out of these twenty miles, nine miles lie in Mysore State and eleven miles lie in Tamil Nadu State. I have sent a memorandum to the Mysore Government and they are considering it. May I request the Hon. Minister to take necessary steps in the matter?

The HON. THIRU S. J. SADIQ PASHA : We have already taken necessary steps in the matter.